**13.06.2025**

**அ.வ.எண். 111/2018**

**வா.சா.1 - சுந்தரேசன், த/பெ. சுப்பையன்**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 13.06.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்துக்கள் என் அப்பாவின் தாத்தா பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. 1947 ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தின் சி-அட்டவணை சொத்து பழனிக்கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் ஆகும், **06.10.1947 பாகப்பிரிவினை பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பழனிக்கவுண்டருக்கு என்னுடைய தாத்தா ரங்கசாமி கவுண்டர் மட்டும் ஒரே வாரிசாவார்.

2. பி.சா.ஆ.1 ல் என் அப்பாவின் தாத்தாவிற்கு வந்த சொத்தை தான் என் தாத்தா, என் அப்பா சுப்பையன், என் சித்தப்பா நடராஜன் ஆகியோர் 1991 ம் ஆண்டில் வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக பாகம் செய்து கொண்டனர். வா.சா.ஆ.1 ஆவணத்தில், ஏ-அட்டவணை சொத்து என் தாத்தா ரங்கசாமிக்கு ஒதுக்கப்பட்டது. பி-அட்டவணை சொத்து என் அப்பா சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்டது. சி-அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதியான என் சித்தப்பா நடராஜனுக்கு ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம், அனைவரும் சம்மதித்து எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. என் தாத்தா ரங்கசாமி கவுண்டருக்கு ஒதுக்கிய ஏ-அட்டவணை சொத்துக்களை அவர் உயிருடன் இருந்தபோது விற்றுவிட்டார். என் தகப்பனாருக்கு ஒதுக்கிய பி-அட்டவணை சொத்து குறித்து என் அப்பா பெயரில் பட்டா பாஸ்புத்தகம், சிட்டா, என் அப்பா பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா பாஸ் புத்தகம் மற்றும் சிட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை. சி-அட்டவணை சொத்து குறித்து 1ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டது.

4. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின அசல் என் தகப்பனாரிடம் தான் உள்ளது, அவர் இறப்பிற்கு பின்னிட்டு எங்களிடம் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் நிறைய சொத்துக்கள் குறித்து எழுதப்பட்டுள்ளது, என்றும் வழக்கானது இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F க்கு மட்டும் தான் நடைபெறுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், என் தகப்பனாருக்கு ஒதுக்கிய பி-அட்டவணை சொத்தில் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. பட்டா, சிட்டா வந்த போது இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F குறித்து என் அப்பா பெயரில் மேற்படி ஆவணம் வராதது குறித்து பார்த்திருப்போம் என்றால் என் அப்பாவிற்கு விவரம் தெரியாது. நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 43 வயது ஆகிறது. 2018 ல் நானும், என் அக்காவும் பாகப்பிரிவினை செய்ய போகும் போது தான் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் பி-அட்டவணையில் குறிப்பிடவில்லை என தெரிந்துகொண்டோம். மேற்படி விவரங்களை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில், பி-அட்டவணை சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14,590/- எனவும், ஆனால் கூட்டினால் ரூ.14,490/- தான் வருகிறது என்றும் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்தையும் சேர்த்தால் தான் ரூ.14,590/- வரும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், என் அப்பாவின் தாத்தாவிற்கு இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்து ஒதுக்கப்படவில்லை என்றால் தெரியவில்லை. இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 1.18 ½ சென்ட் சொத்து ரங்கசாமி கவுண்டருக்கு பட்டா மூலம் பாத்தியம் என்றால் தெரியாது.

7. இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்தானது ரங்கசாமி கவுண்டருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டதால் அது பூர்வீக சொத்து அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F பாதி பகுதியினை 1 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் 1991 ல் எழுதப்பட்டது என்றும், அப்போதே தாவா சொத்தின் ஒரு பகுதி 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா 1995 ல் இறந்தார். 1991 முதல் 1995 வரை என் தாத்தாவோ, அப்பாவோ பிழை

திருத்தல் செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் ஆவணம் பிழை ஏற்பட்டது பற்றி எங்களுக்கு தெரியாது. 1995 முதல் 2018 வரை நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தோமா என்றால் 2018 ல் தெரியவந்தது.

8. 2018 ல் தெரிந்த பின்னிட்டு நான் ஏதாவது பிழை திருத்தல் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்த பிறகு அவர்கள் இரண்டு ஆவணம் ஏற்படுத்தியது தெரியவந்தது. அந்த வில்லங்க சான்றிதழை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் ஏ-பாகம் மதிப்பு ரூ.3,440.75 பைசா என உள்ளது, பி-பாக மதிப்பு ரூ.14,590/- என உள்ளது, சி-பாக மதிப்பு ரூ.13,726.25 பைசா என உள்ளது என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மற்றவர்களை விட எங்களுக்கு அதிகமாக சொத்து மதிப்பு உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F ஒதுக்கப்படவில்லை என்றும், அதை ஒப்புகொண்ட பிறகு தான் என் தகப்பனார் கையொப்பம் செய்தார் என்றால் அது தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தவறு ஏற்பட்டது என 17 வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் 17 வருடங்கள் கழித்து தான் தெரியவந்தது. மேற்படி வழக்கு காலதாமத சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

10. என் தகப்பனாருக்கு 1991 ல் பட்டா, சிட்டா மாறுதலுக்கு பின்னிட்டு பாகப்பிரிவினை பத்திரம் தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்றுகொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F ல் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது போக மீதமுள்ள சொத்துக்கள் பொதுவில் தான் இருந்தது என்றால் இல்லை. பொதுவில் இருந்ததால் தான் 2, 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பங்கினை 1ம் பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தனர் என்றால் தவறு. பாகபாத்திய விடுதலை பத்திரம் செல்லாது என கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

11. மேற்படி 59 ½ சென்ட் நிலத்தில் நானும், என் அப்பாவும் தனி சுவாதீனத்தில் இருந்தோம் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்னவாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 59 ½ சென்ட் கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளது என்றும், அதில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் 59 ½ சென்ட் நிலத்தில் பாகம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் ஆவணங்கள் செல்லாது என கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்லவழக்கு மூலம் இல்லாத காரணத்தால் எனது வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur